துரோபதை குறவஞ்சி

- தாள் சுவடி

சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக
(Diploma) சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு

நா. மனோகரி

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005.

மே 2004

துரோபதை குறவஞ்சி

- தாள் சுவடி

சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக
(Diploma) சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு
நா. மனோகரி

மேற்பார்வையாளர்

முனைவர். வீ. அரசு

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005.

மே 2004

முனைவர். வீ. அரசு,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005

மேற்பார்வையாளர் சான்றிதழ்

'சுவடியியலும் பதிப்பியலும்' நிறைசான்றிதழுக்கான பதிப்பேட்டை ஆய்வாளர் நா. மனோகரி அவர்கள் என் மேற்பார்வையில் தாள் சுவடியிலிருந்து **'துரோபதை குறவஞ்சி'** என்னும் பதிப்பேட்டை உருவாக்கியுள்ளார். இந்த பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்று சான்றளிக்கிறேன்.

வீ. அரசு,
(மேற்பார்வையாளர்)

இடம் : சென்னை
நாள் :

நா. **மனோகரி**, எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,
ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை 600 005.

பதிப்பு உறுதிமொழி

'சுவடியியலும் பதிப்பியலும்' நிறைசான்றிதழுக்கான **'துரோபதை குறவஞ்சி'** என்னும் தாள் சுவடி பதிப்பேடு என் சொந்த முயற்சியால் உருவானதாகும். இந்தப் பதிப்பேடு இதற்குமுன் வேறு எந்த பட்டத்திற்கும் ஆய்வரங்கிற்கும் அளிக்கவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

(நா. மனோகரி)

இடம் : சென்னை
நாள் :

பொருளடக்கம்

இயல் எண்	தலைப்பு	பக்கஎண்
	ஆய்வுரை	
1.	தமிழ் அரங்க வரலாறு	1
2.	துரோபதை குறவஞ்சி	16

நன்றியுரை

'சுவடியியலும் பதிப்பியலும்' என்னும் நிறைசான்றிதழ் பயில வாய்ப்பளித்து பதிப்பேடு உருவாக்கம், தலைப்பு தேர்ந்தெடுத்தல், ஆலோசனைகளை வழங்கல் போன்றஅனைத்து நிலைகளிலும் உதவிய எனது நெறியாளரும், தமிழ் இலக்கியத் துறைத்தலைவரும், பேராசிரியருமான முனைவர் **வீ. அரசு** அவர்களுக்கு நன்றி.

பதிப்பிற்கான பல கருத்துகள் வழங்கிய தமிழ் இலக்கியத்துறை விரிவுரையாளர்கள் ய. மணிகண்டன், முனைவர் கி.ஜெயக்குமார் மற்றும் முனைவர் கோ. பழனி ஆகியோருக்கும் என் நன்றி.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள கீழ்திசை சுவடியியல் காப்பாளர் மனமுவந்து அனுமதி கொடுத்ததற்கு அவருக்கும் மற்ற நூலகப் பணியாளர்களுக்கும் நன்றி.

இந்த தாள்சுவடியை நூல்படிவில் கொண்டு வருவதற்கு அனைத்து நிலைகளிலும் உறுதுணையாக இருந்த ஆய்வாளர் சு. லட்சுமிக்கும் அச்சுவடிவம் செய்த ஜி. குமார் அவர்களுக்கும் நன்றி.

என்னுடன் நூலகத்திற்கு வந்து எனது ஆய்விற்கு பெரிதும் துணை புரிந்த என் வாழ்க்கை துணைவர் டோ. டேவிட் ஸ்டான்லி அவர்களுக்கும் நன்றி.

ஆய்வுரை

பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தாள் சுவடியான 'துரோபதைக் குறவஞ்சி' ஒரு சிற்றிலக்கிய வகையில் அடங்கக்கூடிய நூலாகும். இது ஆரம்ப காலங்களில் வாய்மொழி இலக்கியமாக வழங்கி வந்த நூல் வகைகளில் ஒன்றாகும். இக்குறவஞ்சி நூல் மட்டுமின்றி இவ்வகையிலான நூற்கள் எவ்வாறு பதிப்பிக்கப்பட்டன என்பதை விளக்கும் பொருட்டு தமிழ் அரங்க வரராறு - அச்சும் பதிப்பும் என்ற தலைப்பிலான தகவல்கள் தரப்பட்டுள்ளன. மற்றொரு விளக்கப் பிரிவில் இப்பதிப்பில் முதன்மையாக கருதப்படும் துரோபதை குறவஞ்சி எனும் தாள் சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பட்ட அச்சு வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில்,

1. அரங்க வரலாறு
2. வாய்மொழிப் பதிவு
3. ஓலைச்சுடியில் பதிவு
4. அச்சின் தோற்றம்
5. ஓசை ஒழுங்கு
6. கூத்துப் பிரதி உருவாக்கம்

ஆகிய துணை தலைப்புகளில் தமிழ் அரங்க வரலாற்றினைப் பற்றிய விளக்கங்கள் தெளிவுறுத்தப்பட்டுள்ளன.

பதிப்பு பணிக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட தாள் சுவடி, 'துரோபதைக் குறவஞ்சி'யும் அனந்தப் பிள்ளை அவர்களால் மேற்கண்ட பதிப்பு வரலாற்றினை ஒத்து, வாய் மொழியிலிருந்து சுவடிக்கும் பின்னர்

தாள் சுவடிக்கும் மாறியது. மேற்கண்ட துணைத் தலைப்புகளில் காணப்படும் விளக்கங்களைக் கண்டு பின்னர் துரோபதைக் குறவஞ்சி பதிப்பிக்கப்படுகிறது.

கதைச் சுருக்கம்

பஞ்ச பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டு வனவாசம் முடிந்து ஒரு வருடம் அக்கியாதவாசம் செய்யும் பொருட்டு விராடபுரம் வந்தார்கள். தர்மராசா பிராமண வேடமும், வீமசேனன் சமையற் கலைஞனாகவும், அருச்சுனன் நட்டுவனாகவும், நகுலன் இராவுத்தனாகவும், சகாதேவன இடையனாகவும், துரோபதை பணிப் பெண்ணாகவும் வேடம் கொண்டனர்.

சில நாட்களுக்குப் பின்னர் துரோபதை தர்மராசாவிடம் உத்தரவு கேட்டுக் கொண்டு, குறத்தி வேடங்கொண்டு கிருஷ்ணதேவரை குழந்தையாக்கி மடியில் கட்டிக் கொண்டு துரியோதனின் மனைவி பெருந்திருவாளையின் மனைக்குச் சென்றாள்.

பெருந்திருவாளையிடம் குழந்தைக்குப் பால் வேண்டுமென்று குறத்தி கேட்கிறாள். முலைப் பால் அளிக்கிறாள் பெருந்திருவாளை.

முதலில் குறத்தி தன் நாட்டுவளம் கூறுகிறாள். துரோபதையான குறத்தியின் குலாச்சாரம் கேட்கிறாள் பெருந்திருவளர். பொய் சொன்னால் பதிவிரதா தருமம் குலையுமென்று எண்ணுகிறாள் துரோபதை. அதன்படி பெருந்திருவாளை அறியாது மெய் சொல்லவேண்டுமென்று மறைமுகமாக தன் குலாச்சாரம் கூறுகிறாள்.

புருடர்களால் அல்லாது மந்திரத்தாலும் வரத்தினாலும் எங்கள் நாட்டில் பிள்ளையுண்டாகும் என்கிறாள் குறத்தி.

பன்னிரண்டு வருடமாய் தன் மனதிலுள்ள கிலேசம் சொல்லச் சொல்லுகிறாள் பெருந்திருவாளா.

"உன் பெயர் பெருந்திருவாள், உடன் பிறந்தவள் சுபத்திரை. உன் கணவன் பெயர் துரியோதனன். பஞ்ச பாண்டவர்களை நீங்கள் பல்வகை உபாயம் செய்து கொல்ல மனம் துணிந்தீர்கள். ஆனால் மாயன் மாமன் உபாயத்தினால் அவர்கள் தப்பிப் பிழைத்தனர். அவர்கள் தம் தேவியரை துகிலும் உரித்தீர்கள். பாண்டியரை வனவாசமும் போகச் செய்தீர்கள்" என்றாள் குறத்தி.

பெருந்திருவாளை, குறத்தியிடம் பாண்டவர்கள் திரும்புவார்களா என்று வினா தொடுக்கிறாள்.

காடு சென்றவர் நாடு பெற வேண்டி செய்யும் யுத்தம் மீதம் இருக்கு என்கிறாள் குறத்தி. மன்னவர்களின் மார்மேலே கூந்தல் முடிப்பேனென்று சொன்ன துரோபதையின் சபதம் முடிக்க வருவார்கள் என்கிறாள்.

பெருந்திருவாளை மெத்த விசனப்பட்டாள். அது கண்ட குறத்தி அவளைப் பல விதமாய் புகழ்ந்து கூறி, அவள் ஒரு ஆண்பிள்ளையை பெற்றெடுப்பாளென்று கூறுகிறாள்.

குறத்தியின் மனம் கண்டுகொண்ட பெருந்திருவாளை தொன்னூற்றொன்பது ராச கன்னிகைகளையும் காவல் வைத்து, மாமி காந்தாரியின் அரண்மனைக்குச் சென்றாள்.

குறத்தி நடந்த உண்மைகளை ஒன்று விடாமல் கூறியதை மாமியிடம் சொன்னாள். இந்தக் குறத்தி யாராயிருக்கும் என்று விசாரப்பட்டாள் பெருந்திருவாளை. காந்தாரி அவளைச் சமாதானப்படுத்தி, குறத்தியை நம் காவலிலேயே வைத்துக் கொண்டால் அவள் பூர்வீகம் அறியலாம் என்று கூறி பெருந்திருவாளையை உணவு உண்ணச் செய்தாள்.

குழந்தை மாயவன் கா..கா.. வென்று கூவிற்று. வேந்தன் குறவனாய் வேஷங் கொண்டு குறவஞ்சியைத் தேடிக் கொண்டு பெருந்திருவளா் மனையில் குறத்தியைக் கண்டான்.

குறவன் குறத்தியிடையே வாக்குவாதம் முற்றிற்று. காரசாரமாய் குறவன் அதட்டிட, குறத்தி செந்நெல்லை எடுத்துக் கொண்டு ஓடப் பார்த்தாள். தொன்னூற்றொன்பது ராச கன்னிகளும் அதட்டினார்கள். ஆனால் குறவன் பின்தொடர குறத்தி போய்விட்டாள் என்ற சேதி கேட்ட பெருந்திருவாளை பெரும் விசனமுற்றாள்.

குறவனும் குறத்தியும் விராடபுரம் வந்து தர்மராசரைக் கண்டு, செந்நெல்லைக் கொடுத்தார்கள். அவர் அதை வீமன் கையில் கொடுத்து விதைக்கச் சொன்னார்.

இவ்வாறாக இக்குறவஞ்சியானது அனந்தப் பிள்ளை வாத்தியார் அவர்களால் எழுதப்பட்டது என்று முடிவுறுகிறது.

பண்டை காலந்தொட்டே இயல், இசை, நாடகம் என்று மூன்று முறைகளில் தமிழ் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இவ்வகையுள் மூன்றாவதாய் உள்ள நாடகப்பாங்கில் இக்குறவஞ்சி இயற்றப்பட்டுள்ளது.

குறவஞ்சி என்பது தொன்னூற்றாறு சிற்றிலக்கியங்களில் ஒன்றாகும். குறவஞ்சி நூற்களுள் சிறந்ததாகக் கருதப்படுவது திரிகூட ராசப்ப கவிராயர் அவர்கள் எழுதிய குற்றாலக் குறவஞ்சியேயாகும்.

'துரோபதைக் குறவஞ்சி' அனந்தப் பிள்ளை வாத்தியார் எழுதியது என்பதை இக்குறவஞ்சியின் இறுதியில் காணப்படும் குறிப்பின் மூலம் அறிகிறோம். இக்குறவஞ்சி நாடகப் பாங்கில் அமைந்துள்ளது. குறவனும் குறத்தியும் உரையாடும் இடங்கள் சுவை மிகுந்து காணப்படும்.

நாடகத்தின் பெரும்பகுதி பெருந்திருவாளையும், குறத்தியாக வேஷங்கொண்ட துரோபதையும் உரையாடும் பகுதியையே கொண்டுள்ளது. தெய்வ வழிபாட்டு முறை குறத்தியால் விளக்கப்படுகிறது.

குறத்தி குறி சொல்வதற்கு முன்பு அழைக்கும் தெய்வங்களென கங்கை, பவானி, காளி, அங்காளம்மன், அய்யனாரப்பன், தேவதைகள், ஈசன், கொல்லாபுரத்தம்மன் ஆகிய தெய்வங்கள் சுட்டப்படுகின்றன.
குறத்தி வணங்கும் தெய்வங்களென வினாயகன், முருகன்,

சரஸ்வதி, சிவன், மாயன், பிரம்மன், தேவர்கள் ஆகிய தெய்வங்கள் கூறப்படுகின்றன.

ஏனைய குறவஞ்சி நாடகங்களைப் போன்றே இந்தக் குறவஞ்சியிலும் குறத்தியின் நாட்டு வளம் குறத்தி மொழியாகவே சொல்லப்படுகிறது. பின்பு சிங்கனுடன் வாதிடும் போதும் நாட்டு வளம், மலை வளம் பேசப்படுகிறது. சிங்கனுடன் சிங்கி உரையாடும் பகுதி பொருள் விளக்கும் பொருட்டு சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தாள் சுவடியாய் உள்ள இக்குறவஞ்சியை பதிப்பிக்கும் பொருட்டு நிறுத்தற்குறியிடுதல், நடைமுறை வழக்கில் மொழிகள் மாற்றல் போன்ற சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்நாடகத்துள், நாடகத்தின் கூறுகள் அனைத்தும் அடங்கியுள்ளன. இதில் பாடல், வசனம், தருக்களின் வகைகள் காணப்படுகின்றன. சந்தங்களும் பாடல்களுக்கு சொல்லப்பட்டுள்ளன.

மரபுசார் நாடகங்களும், தெருக்கூத்துக்களும் மாறி வருகின்ற இக்காலகட்டத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி நமக்கு கிடைத்திருக்கின்ற இந்தப் பதிப்பானது பல வகையில் உதவியாய் இருக்கும். குறிப்பாக மற்ற குறவஞ்சி தாள் சுவடியுடனும், நாடகத்தினுடனும் ஒப்பிட்டு காண்பது போன்ற பணிகளுக்கு பேருதவியாய் இருக்கும். மேற்கூறிய நம்பிக்கையுடன் இந்நூலினை பதிப்பிக்கிறேன்.

தமிழ் அரங்க வரலாறும்

அச்சுப் பிரதியும் உருவாக்கம்

மிகப் பழங்காலத்தில் மனிதன் விலங்கைப் போல வாழ்ந்து வந்தான். ஒலியை உற்று அறியும் காதுகள் இருந்தும் மொழியை அறியாது இருந்தான். தன்னுடைய தேவைகளைச் சைகை மொழியின் மூலமாகவும் உணர்ச்சி மொழியின் மூலமாகவும் காட்டினான். இம்முறை வளர்ச்சி பெற்று மொழி உண்டானது. மொழியில் ஒலி வடிவம் இருந்தது. காலப்போக்கில் ஒலி வடிவத்திற்கு ஏற்றவாறு வரி வடிவமும் கொடுக்கப்பட்டது. இவ்வாறு மொழி, சூழலுக்கு ஏற்றவாறு வளர்ச்சி பெற்று வந்தது.

ஒவ்வொரு வடிவமும் ஒவ்வொரு கருத்தினைக் குறிப்பதோடு நிற்காமல் அந்த வடிவத்திற்குரிய ஒலியினையும் குறிப்பதாயிற்று... முதலில் ஒவ்வொரு வடிவமும் காட்டும் முழு ஒலியையும் கொண்டு சொற்களை எழுதினர். பின்னர் அந்த ஒலியின் முதலசையை மாத்திரம் அதனதன் வடிவம் குறிப்பதாகக் கொண்டு எழுதினர்...(மா.சு. சம்பந்தன்:1980)

தனக்கு முன் இருப்பவர்களிடம் தன்னுடைய கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்வதற்காக மொழியானது மனிதனால் உண்டாக்கப்பட்டது. தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் உணர்ச்சி மொழியால் ஒலி எழுப்பியும் இசையால்

சைகை காட்டியும், சித்திரத்தால் சித்தரித்தும் பழகி வந்தான். அதனையே கருத்திற்கு அடையாளமாக்கினான். இம்முறை வளர்ச்சி பெற்ற பின்பு எழுத்து, வடிவம் பெற்றது.

மொழியில் வரிவடிவம் உருவானபோது பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவாகின்றது. தமிழில் பதிவு செய்ய ஓலைச்சுவடி, கல்வெட்டு ஆகியவற்றைப் பயன்படுத்தினர். பின்னர் ஐரோப்பியர்கள் வருகையால் அச்சு வடிவம் வருகிறது. இதனால் பல இலக்கிய இலக்கணக் கூறுகள் அச்சாக்கப்படுகின்றன. அவைகளில் கூத்துப் பிரதிகளும் அச்சாக்கப்பட்டன. கூத்துப் பிரதிகள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்ததால் அதிகமாக உருவானது.

அரங்க வரலாறு:

நாடகம் என்பது அவைக்கு ஆற்றப்படும் கலைகளில் ஒன்றாகும். ஒரு நாடகம் எழுதப்படுவதாலோ, பாடப்படுவதாலோ நாடகம் ஆகாது. அது நடிக்கப்படவேண்டும். நாடகம் என்பது நிகழ்த்திக் காட்டப்படுவது, அது நிகழ்த்தி காட்டப்படும் இடமே அரங்கு. அரங்கின்றி நாடகம் இல்லை. தமிழில் பெரும்பாலும் நாடகம் என்ற சொல்லையே வழக்கில் பயன்படுத்தி வந்துள்ளனர்.

'தியேட்டர்' என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்த சொல்லாகும். கிரேக்க மொழியில் இச்சொல் பார்த்தல், பார்க்குமிடம்

என்று பொருள்படும். இன்றைய நிலையில் தியேட்டர் என்ற சொல் இன்னும் விரிவான அர்த்தமுடையது. ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்குரிய பண்பாடு, சமய சமூகப் பின்னணிகளின் மூலமாக வரும் கருத்துக்கள் நிகழ்த்திக் காட்டப்படுவதும் தியேட்டரில் அடங்கியுள்ளது. தியேட்டர் என்ற சொல்லுக்குள் நாட்டிய நாடகம், பாவைக் கூத்து, கதா காலட்சேபம், நாட்டுக்கூத்து, நாடகம் ஆகிய பல பிரிவுகளும் அடங்கும் (சி. மௌனகுரு:1993)

தமிழ் நாடகத்தைப் பற்றி ஆய்வு செய்பவர்கள் அரங்கத்தின் வாயிலாக அல்லாமல் நூல்களின் வாயிலாகப் பெரும்பாலும் ஆய்வு செய்தனர். சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை போன்றவற்றில் உள்ள அரங்கச் செய்தியைப் பேசியுள்ளனர். அரங்கம் என்ற கருதுகோள் அடிப்படையிலான ஆய்வுகள் மிகவும் குறைவு. தமிழில் அரங்க மரபுகள் இல்லை என்று கூற முடியாது. ஒரு வகையான அரங்க மரபு உருவாகி வளர்ந்துள்ளதை இலக்கியங்களின் வாயிலாக அறியலாம். வெறியாட்டு, தைந்நீராடல், களவேள்வி, முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை அரங்கத் தன்மை வாய்ந்த கூறுகளை அவற்றில் காணலாம்.

அரங்கமானது தொடக்க காலத்தில் சமயம் சார்ந்து உருவானது. இவ்வாறு மக்களை மகிழ்விப்பதற்காக மனித வேடம் பூண்டு நடிப்பது போன்ற முறைகள் உருவாகின்றன. இவைகள் கூத்துக்கள் எனப்படும். அரங்க முறைகள் இவற்றையடுத்து உருவாகின எனலாம். இவ்வையில் கரகாட்டம், பொய்க்கால் குதிரை

ஆட்டம், கும்மி, கோலாட்டம், காவடியாட்டம், உடுக்கடி கதை போன்ற ஆட்டங்கள் அரங்கக் கூறுகள் கொண்டவை எனலாம்.

இவ்வகையான ஆட்டத் தன்மைகளைக் கொண்டதாகக் கூத்தும் உருவாகின்றது. 1478-க்குப் பிறகு கூத்து நூல்கள் கிடைக்க ஆரம்பிக்கின்றன. இதே அமைப்பிலான பள்ளு, குறவஞ்சி என்பன நாயக்கர் காலப்பகுதியில் காணப்படுகின்றன. நாடக மரபை அறிந்து கொள்ளும் வகையில் 15-ஆம், 16ஆம் நூற்றாண்டு பள்ளு குறவஞ்சி போன்ற கூத்து நிகழ்த்தப்பட்டதாகத் தரவுகள் கிடைக்கின்றன என மௌனகுரு கூறுகின்றார்.

வடமொழி மரபிலான விலாசம் என்ற சொற்பிரயோகம் தமிழ் நாட்டில் 9-ஆம் நூற்றாண்டிலிருந்து வந்தாலும், தமிழில் விலாச நூல்கள் எழுந்த காலம் 19-ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். இவ்வகையில் விலாச நாடகங்கள் கூத்திலிருந்து பரிணமித்து பரிணமித்து எழுந்தவையாகும். இதில் பிறமொழிக் கூறுகளும் கலந்து காணப்படுகின்றன. மேலும் கர்நாடக இசையும் இந்துஸ்தானி இசையும் இடையிடையே கொண்டு புதிய வடிவமாக வளரத் தொடங்கின.

விலாசங்கள் வளர்ச்சி பெற்று சபா நாடகங்கள் வந்தன. இவ்வாறு சபை என்ற பெயரில் 19-ஆம் நூற்றாண்டு கடைசி ஆண்டுகளில் காணப்படுகின்றன.

1989-இல் இந்திரசபா என்னும் நூதன நாடகத்தை அப்பாவுப்

பிள்ளை தமிழில் இயற்றினார். இது பல வருடங்களுக்கு முன்னர் சென்னைக்கு வந்த பாரசீக நாடகக் கம்பனியார் ஆடிய கதையாகும்......(பம்மல் சம்பந்த முதலியார்.1933)

சபாக்கள் என்கின்ற அரங்கக் குழுக்கள் தோன்றிய கால கட்டத்தில். மெட்டுக்களை அமைத்துப் பாடல்களைக் குறிப்பிட்டிருந்தனர். காட்சி மாற்றங்களும், வசனங்களை இயற்கையாகப் பேசுதலும் இதில் இடம்பெற்று இருந்தன. இதே காலத்தில் இசை நாடகம் என்கின்ற வடிவம் எழுகின்றது. 1870-இல் கோவிந்த சாமிராவ் என்பவர் புதுவகையான நாடக வடிவம் ஒன்றை மேடையில் ஏற்றத் தொடங்கினார்.

இவர் 40 இசை நாடகங்கள் இயற்றியுள்ளார். இக்கால கட்டத்தில் பல நாடகக் கம்பெனிகள் ஆரம்பிக்கப்பட்டன. அப்பொழுது ஆங்கிலேயர்களின் ஆட்சி பல சுதேச முதலாளிகளை உருவாக்கியது. அவர்களிடத்தில் பணம் முக்கிய இடம் பெற்றது.

இவ்வகையில் நாடகக் கம்பெனிகளை நடத்துவது என்பது நல்ல தொழிலாகவும் அவர்களுக்குத் தோன்றியது. இவைகள் முற்றிலுமாக மாற்றம் பெற்று நவீன தொழில் நுட்பத்தின் காரணமாக சினிமாவாக வளரத் தொடங்கின.

மேற்கத்திய தாக்கத்தால் 'நவீன நாடகம்' தோன்றியது.. இவைகளுக்கிடையே மொழி பெயர்ப்பு நாடகங்களும் இதில் இடம் பெற்றன. இந்த அரங்குகள் மரபுகளைத் தாண்டி வேறுபட்டதாகக்

காணப்பட்டது. இவைகள் அல்லாமல் தேசிய உணர்சினாலும், இன உணர்வுகளாலும் அரங்குகள் தோன்றின. இவை மரபை உள்வாங்கிய நவீன அரங்காகச் செயல்பட்டன.

புதிய தன்மைகளைக் கொண்ட அரங்கங்கள் இந்தியாவில் அறுபதுகளில் உருவாகத் தொடங்கின. இக்கால கட்டத்தில் பல குழுக்கள் உருவாகின. சில இடங்களில் பட்டறைகளையும் நடத்தினர். இவ்வகையான பட்டறைகள் நவீன அரங்கங்கள் வளர்வதற்கு அடிப்படையாக அமைந்தன.

இவ்வாறு தமிழில் அரங்கமானது தொடக்கத்தில் சமயம் சார்ந்ததாகக் காணப்பட்டது. பின்னர் சமயத்தினின்று விடுபட்டு பல புதிய வடிவங்களாக வளர்ச்சி பெற்றது. இதிலிருந்து கூத்துக்களும் இசை நாடகங்களும் வளர்ச்சியடைந்தன. பின்னர் ஐரோப்பியர்களின் தாக்கத்தால் 'டிராமாவாகவும்', 'நவீன நாடகமாகவும்' அரங்கம் வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

வாய்மொழிப் பதிவு:

தான் கண்டவற்றைக் கேட்டவற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் பழங்காலம் முதற்கொண்டே இருந்து வருகின்றது. ஆனால் பதிவு செய்யும் முறைதான் காலத்திற்கு ஏற்றவாறும் சூழலுக்கு ஏற்றவாறும் மாறுபாடு அடைந்து வந்துள்ளது.

வேட்டையாடித் திரும்பும் மனிதன் அவன் கண்ட காட்சியை கற்பாறையில் பதிவு செய்தான். இவ்வாறு பதிவு செய்யும் முறை புராதன காலத்திலிருந்து தொடங்கினாலும், வரிவடிவம் கண்டுபிடித்த பின்பே பதிவு செய்யும் பழக்கம் அதிகமாக எழுந்தது.

பதிவு செய்யும் களன்கள் காலத்திற்குக் காலம் மாறுபட்டு வந்துள்ளது. பதிவு செய்யப்பட்ட முறையும் பொருளுக்கு ஏற்றவாறு அமைந்து இருந்தது. கல்லில் வெட்டுவதற்கு ஏற்பவும், செப்புத் தகட்டில் பொறிக்கப்படுவதற்குத் தக்கவாறும், ஓலைச் சுவடியில் வரைவதற்கு ஏற்றவாறும் எழுத்துக்களின் வரிவடிவம் இருந்தது. தொடக்க காலத்தில் மேற்கண்ட பொருட்களைப் பயன்படுத்தினாலும், ஓலைச் சுவடியே அதிகமாகப் பயன் படுத்தப்பட்டது. காரணம் ஓலைச்சுவடியே எழுதுவதற்கும், கிடைப்பதற்கும் எளிதாக இருந்தது. எனவே ஓலைச் சுவடிகளையே அதிகமாகப் பயன்படுத்தினர். (மா.சு. சம்பந்தன்:1980:8)

பதிவு செய்வதற்கு வரிவடிவம் கண்டுபிடித்தது ஒரு காரணமாக அமைந்தாலும் அதனைப் பயன்படுத்தியவர்களும் அதற்கு மற்றொரு காரணமாக அமைந்தனர். அக்காலத்தில் உள்ள இலக்கியக் கூறுகள் அனைத்தையும் மனப்பாடம் செய்து வழிவழியாகப் பயன்படுத்தி வந்தனர். பின்னர் இதனை அச்சில் பதிவு செய்யும் வசதி இருந்ததினால் பதிவு செய்கின்றனர். அக்காலத்தில் குருகுலக் கல்வி முறையானது வழக்கத்தில் கொண்டு

இருந்தது. ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கூறும் பாடங்களைப் பதிவு செய்து கொண்டு கூறினார்கள்.

இவ்வாறு புலவர்கள் தாங்கள் இயற்றிய பாடங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்றால் அதனை ஓலைச் சுவடியில் பதிவு செய்தபின்பு அதனை அரங்கேற்றம் செய்வார்கள். தாங்கள் படைத்தவற்றைப் பிறர் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு சிலர் பதிவு செய்தனர்.

பிள்ளைகள் நாள் தோறும் விடியற்காலையில் எழுந்து ஆசிரியர் வீட்டிற்கு சுவடித் தூக்கோடு வருவார்கள். ஓலைச் சுவடிகளை வைத்துத் தூக்கிச் செல்லும் கயிறுகள் சேர்ந்த பலகைக்கு சுவடித்தூக்கு என்று பெயர். (மா.சு. சம்பந்தன்:101:2)

பதிவு செய்வதற்கு வரிவடிவம் கண்டு பிடித்தாலும் குருகுல வாழ்க்கை முறையில் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டியவற்றை ஓலைச் சுவடியில் பதிவு செய்து கற்பித்தாலும் புலவர்கள் தாங்கள் இயற்றியதை அரங்கேற்றவும் பிறர் படிக்க வேண்டும் என்பதினாலும் பதிவு செய்ய வேண்டும் என்கின்ற பழக்கம் உருவானது.

ஓலைச்சுடியில் பதிவு:

தற்காலத்தில் உள்ளது போல் வளாகக் கல்விமுறை தொடக்க காலத்தில் இருந்ததில்லை. குருகுலக் கல்வி முறையாக

இருந்தது. மரத்தடி நிழலின் கீழும் அதன் கீழ் இருக்கும் மேடைகளிலும் கற்றுக் கொடுத்தனர். அதன்பின் திண்ணையிலும், பின்பு முன்னேற்றமடைந்து சிறு குடிசைகளிலும் நடைபெற்றன.

சமண, சைவர்கள் காலத்திலிருந்து பள்ளி என்ற சொல் தோன்றியது. இச்சொல்லை அவர்கள் பயன்படுத்திய மடங்களுக்கும், கல்வி கற்கும் கூடங்களுக்கும் பொதுவாகப் பயன்படுத்தினர். இவ்வாறு கல்வி கற்பிக்கும் முறை வந்தபோது பதிவு செய்து பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அக்காலத்தில் ஓலைச்சுவடியில் பதிவு செய்யும் முறை வருகின்றது.

ஓலைச் சுவடியில் பதிவு செய்யும் வசதி வருவதற்கு முன் தங்களுக்குத் தெரிந்த அனைத்துக் கருத்துக்களையும் செய்யுள் வடிவில் அமைத்தனர். இவை மனப்பாடம் செய்வதற்கும், ஓலைச் சுவடியில் குறுகிய பகுதியில் பதிவு செய்வதற்கும் ஏற்றவாறு இருந்தது.

எனவே பதிவு செய்ய வேண்டும் என்ற வசதியும் வாய்ப்பும் வந்தபோது ஓலைச் சுவடிகளில் பதிவு செய்தனர். ஒரு குறிப்பிட்ட நூலைப் படிக்க வேண்டும் என்றால் அந்த நூலை ஓலைச் சுவடியில் பதிவு செய்து வைத்திருப்பவரிடம் சென்று வாங்கிப் படித்து விட்டுத் திருப்பிக் கொடுப்பர் அல்லது பிரதி எடுக்க வேண்டும் என்றாலும் அந்நூலை வைத்திருப்பவரிடம் சென்று படி எடுத்துக் கொள்வர். இவ்வாறு ஓலைச் சுவடி பதிவு செய்யும் முறை மாறி அச்சு வந்தபோது காகிதத்திலும் அச்சிலும் பதிவு செய்தனர்.

அச்சின் தோற்றம்

தங்களுடைய மதத்தைப் பரப்புவதற்காக போர்ச்சுகீசியர் கி.பி.1498-இல் வந்தனர். இதனை அடுத்து 1600-இல் ஒல்லந்தர்களும், 1616-இல் டச்சுக்காரர்களும், 1620-இல் ஆங்கிலேயர்களும் வணிகம் செய்வதற்காக வணிகக் குழுவினராக இந்தியாவிற்கு வந்தனர். முதலில் கடலோரப் பகுதிகளைத் தங்கள் வசமாக மாற்றிக் கொண்டனர். இவர்கள் வியாபார நோக்கத்தோடு தங்கள் மதத்தைப் பரப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடும் இந்தியாவிற்கு வந்தனர்.

இவர்களுடையே உள்ள வாணிகப் போட்டியானது நாடு பிடிக்கும் அளவிற்கு வளர்ச்சி பெற்றது. இதனால் கிறிஸ்தவ ஊழியக் கிளைகளைத் தொடங்கினர். தங்கள் மதத்தைப் பரப்புவதற்தாகத் தங்கள் கிளைகள் உள்ள இடங்களில் அச்சுச் சாதன வசதி செய்து கொடுத்தனர். இதில் சமயத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும், விவிலியத்தை அந்த வட்டார மொழிகளில் மொழி பெயர்த்தும் வழங்கினர்(மா.சு. சம்பந்தன்:1980:121). அனைத்து நாடுகளிலும் அச்சுச் சாதனங்கள் இருந்த போதிலும் அச்சகங்கள் அமைக்கும் முறையில் ஐரோப்பியர்கள் முக்கியமான இடத்தில் இருந்தன.

அச்சு வந்த காலத்தில் உள்நாட்டு மொழிகளில் அச்சிடுவது தடுக்கப்பட்டு இருந்தது. ஐரோப்பியர்களும் அதனைப் பின்பற்றி 2)

வந்தனர். மேலும் தனியார் நிறுவனங்கள் அச்சிடக்கூடாது என்ற சட்டமும் இருந்தது. இதனால் நம் நாட்டில் உள்ளவர்கள் பதிப்பகங்கள் அமைக்க முடியவில்லை. 1985 வரை இது நீடித்தது(மா.சு. சம்பந்தன்:1980:122)

ஆளுநர் தலைவராக இருந்த திரு. சார்லஸ் மெட்கஃப் என்பவர் இச்சட்டத்தை நீக்கிவிட்டார். இதனால் பல அச்சகங்கள் தோன்றின.

பழம் பெரும் பதிப்பாளர்கள் பெரும்பாலும் பண்டைக் கல்வி முறையைப் பெற்றவர்களாக இருந்தனர். இவர்களில் மேலை நாட்டார் வருகையில் கிடைத்த அச்சுக் கலையைப் பயன் படுத்தியும் மேலைக் கல்வி முறையின் அடிப்படையில் பயின்றும் தமிழ் உலகில் திருப்பங்களை ஏற்படுத்தினர். (பு. ஜார்ஜ்:1990:6)

அச்சு பரவல் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, பல தனியார் அச்சகங்கள் தோன்றின. மதப் பிரச்சாரம் செய்ய அச்சகத்தார் விரும்பிய நூல்களையும் மக்கள் மத்தியில் செல்வாக்குக் கொண்ட நூல்களையும் அச்சுச் செய்தனர். இதனால் பல இலக்கண இலக்கிய நூல்கள் பதிப்பு செய்யப்பட்டன. வாய்மொழியாக இருந்த கூறுகளையும், ஓலைச் சுவடியில் இருந்த கூறுகளையும் அச்சுச் சாதனத்தில் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு வாய்மொழிக் கூறாக மனப்பாடம் செய்தவை ஓலைச் சுவடிக்கும், ஓலைச் சுவடியிலிருந்து அச்சிக்கும் மாற்றம் பெற்றது.

ஓசை ஒழுங்கு:

பதிவு செய்யப்படாத வாய்மொழி இலக்கியங்கள் மனப்பாடம் செய்யும் வகையில் அமைந்து இருந்தன. அவைகளில் எதுகை மோனை போன்ற கூறுகள் அதிகமாகக் காணப்பட்டன. காரணம் மனப்பாடம் செய்ய வசதியாக இருப்பதால் இவ்வகையான முறை இயல்பாகவே அமைந்து விட்டது. இவ்வாறு வாய் மொழியாக இருந்த கூறுகளைப் பதிவு செய்யும் முறை வந்தபோது சில நடைமுறைப் பிரச்சனைகள் எழுந்தன. இதனை அப்படியே பதிவு செய்வதா அல்லது பதிப்புத் துறையில் ஈடுபட்டவர்கள் புரிந்து கொண்ட ஒழுங்கு முறையில் பதிவு செய்வதா என்று சிக்கல் எழுகின்றது.

வாய் மொழிக் கூறிலிருந்து பதிவு செய்யும்போது கற்றவர்கள் தாங்கள் ஏற்கெனவே கற்ற இலக்கணத்திற்குத் தகுந்தவாறு பதிப்பித்தனர். வாய் மொழிக் கூறில் ஒருவகை யாப்பு வடிவிலான இசைத் தன்மைகள் உடையதாக இருந்தது. ஒரு சிலர் மூலபாடத்தில் உள்ளதுபோல் அதனுடைய உண்மைத் தன்மை மாறாமல் பதிவு செய்தனர்(மா.சு. சம்பந்தன்:1980)

கூத்துப்பிரதிக்கென்று தனியான பதிப்பகங்கள் இருந்தன. அவை குறிப்பிட்ட யாப்பு அமைப்பில் அமைந்துள்ளன. இவ்வாறு இந்த குறிப்பிட்ட தன்மை காணப்படவில்லை என்றால் அவை கூத்துப்பிரதியா ? என்ற அய்யத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன.

கூத்துப் பிரதி உருவாக்கம்

கூத்துப் பிரதிகளின் உருவாக்கம், அதற்கு முன் பின் வந்த பிரதிகளின் உருவாக்கத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியது அவசியமாகும். கூத்துப் பிரதிகளின் தோற்றத்தையும் வேறு நாடகக் கூறுகளைக் கொண்ட பிரதிகளையும் வேறுபடுத்திக் காண இயலாது. இவைகள் ஒன்றோடு ஒன்று கலந்தும் ஒன்றிலிருந்து மற்றொன்று பரிணமித்தும் வந்தவையாகும்

கூத்துப்பிரதிகளின் உருவாக்கத்திற்கு முன் நாடகம் எவ்வாறு தோன்றியது என்பதைப் பார்த்தால், புராதன மனிதன் வேட்டியாடிக் குழுவாக வாழ்ந்து வந்தான். வேட்டை ஆடப் போகும் முன் வேட்டை ஆடுவது போல் நடனத்தை நிகழ்த்தினான். இவ்வாறு நிகழ்த்துவதன் மூலமாக அதிக மிருகங்கள் கிடைக்கும் என்று நம்பினான். பசுத்தின் அடிப்படையில் நம்பிக்கையும், நம்பிக்கை சடங்காகவும், அந்தச் சடங்கில் ஒரு பகுதியாக நாடகமும் உருவாகின்றது.

சடங்குகளினால் நாடகம் உருவாகியது எனவும்..... இன்று விஞ்ஞான ரீதியானதும் பொதுவாகப் பலராலும் ஏற்கப்படுவதுமான கொள்கை சடங்குகளில் இருந்து நாடகம் உருவாகியது. (ப.மௌனகுரு:1993:3)

நிகழ்த்தபடுவது போல் அமைந்த நாடகம் நூல் வடிவமாக முதலில் கிடைப்பது 9-ஆம் நூற்றாண்டு மகேந்திரவர்மனின் மத்த

விலாசப் பிரகாசனம் என்ற வடமொழி நூலிலிருந்து உருவான விலாச நூலாகும். கூத்துப்பிரதிகள் என்று எடுத்துக் கொண்டால், 1478-க்கு பிறகு கூத்துப்பிரதிகள் கிடைக்கின்றன.(மௌனகுரு:1993:41) இவைகள் பள்ளு, குறவஞ்சி போன்ற வடிவங்களாகும். இவை நாயக்கர் காலப் பகுதியில் எழுந்த புதுவகை நாடக நூல்களாகும். இவை கூத்து அம்சங்கள் நிறைந்த நாடக நூல்களாகும். . பள்ளு, குறவஞ்சி, காத்தவராயன் நாடகம் போன்ற வகைகள் ஒரே கதையைக் கூறும் நாடக வடிவங்களாகும். ஆனால் கூத்துப் பிரதிகள் இதிலிருந்து வேறுபட்டு பல கதைகளை உள்ளடக்கிய வடிவமாகக் காணப்படுகின்றது.

ஐரோப்பியர்களின் வருகையினால் அச்சுச் சாதனம் வந்தது என்பதைக் கண்டோம். இவ்வாறான அச்சு பரவலாக்கப்பட்டதால், பல தனியார் முதலீட்டாளர்கள், நாட்டுக்கோட்டை செட்டியார்கள் பதிப்புப் பணியில் ஈடுபட்டனர். இவர்கள் பெரிய எழுத்துக் கதைகளை அச்சிட்டனர். இந்தக் கதைகளுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. இதேபோல் மருத்துவத்திற்கும், ஜோதிடத்திற்கும் வரவேற்பு இருந்தது. இந்த வகைகளில் கூத்துப்பிரதிகளும் வெளிவருகின்றன. இவைகள் புராண இதிகாசக் கதைகளையும் நாட்டுப்புறக்கதைகளையும் உள்ளடக்கியதாலும் குறைந்த விலையில் கொடுத்தாலும் மக்கள் மத்தியில் அதிக வரவேற்பு இருந்தது.

எனவே வாய்மொழிக் கூறுகள் ஓலைச் சுவடிக்கும் அச்சுக்கும் மாற்றப்பட்ட போது கூத்துப்பிரதியும் அச்சாக்கப்பட்டது. இவ்வாறு ஓலைச்சுவடியிலிருந்தும் கையெழுத்துப் பிரதியிலிருந்தும் 19-ஆம் நூற்றாண்டு இறுதியிலும், 20-ஆம் நூற்றாண்டு முதற்பகுதியிலும் அதிகமான பிரதிகள் உருவாக்கப் பெற்றன.

ஸ்ரீ ராமஜெயம்

துரோபதை குறவஞ்சி

“திருந்திய புகழ்பாஞ்சாலன் செல்விது ரோபதையாள் தானும்

பெருந்திருவானைபக்கல் பேசியகுறம்யான்பாட

அருந்திய தெய்வாம்ச புரமதில் வாழுங் கங்கை

தருங்கய முகவன் பாதந்தக மகிழ்ந்து திசெய்வேனே”

“ஆதியே யரியே போற்றி யச்சுதா போற்றி போற்றி

சோதிசேர் மழுமானேந்துஞ் சுடரொளி யானே போற்றி

நாதனே வள்ளிபங்கா நாரணன் மருகா போற்றி

காதலாய் குறத்தைபாடக் கதையெனக் கருளுவாயே”

காப்பு முற்றிற்று

இனி நூல்

“பஞ்ச பாண்டவருந்தேவி பாஞ்சாலி தானுங்கூட

வஞ்சகத்திரியோதனாலே வனவாசம் பன்னிரண்டு

தஞ்சமா யொழித்த பின்பு தானுமெ விராடதேசம்

வஞ்சியுந் தானுங்கூட மன்னவர் வந்து சேர்ந்தார்”

வசனம் :-

விராடபுரத்தில் ஒரு வருடம் யாருமறியாமல் அக்கியாதவாசம் பண்ணவேண்டும் என்று தர்மராசாவே ஒரு பிராமணனாகவும், வீமசேனனே ஒரு வண்டகசாலையனாகவும், அருச்சுனனேயொரு நட்டுவனாகவும், நகுலனே ஒரு ராவுத்தனாகவும் சகாதேவனே ஒரு இடையனாகவும், துரோபதை ஓர் பணிப்பெண்ணாகவும் இப்படி ஆறு பேரும் அறு வேடங்கொண்டு விராட ராசாவண்டையிலே போயிருந்தார்கள். அப்போது சில நாட்களுக்குப் பிறகு துரோபதையம்மன் தர்மபுத்திர மகாராசாவை நமஸ்காரம் பண்ணி கை கட்டிக் கொண்டு கேட்கிறாள். (அஸ்தினாபுரத்தை விட்டு அடவிநாம் போன பின்பு)

"அஸ்தினாபுரத்தைவிட்டு அடவிநாம் போனபின்பு
இத்தனாளரவன் சேதி யேதுநாம் அறிந்ததில்லை
நந்திடுங் குறத்தியாக நானுமே வேஷங்கொண்டு
உத்திரமறிந்து வாரேன் உகந்துநீ ரனுப்புமென்றாள்"

வசனம் :-

இப்படி சொன்ன துரோபதை வார்த்தையைக் கேட்டுத் தர்மபுத்திரர் கூறுகிறார். துரோபதை!

"வஞ்சியே நீதான் கேளு மன்னவர் நாட்டிலேதான்
மிஞ்சிய வடிவைப் பார்த்து மெய் குறி யறிந்தாராகில்
வஞ்சனை செய்ய வல்லார் மன்னர் நாட்டில் உன்னைத்
துஞ்சி டவிட்டு நாங்கள் தோகையே இருப்பதில்லை"

வசனம் :-

உன்னைப் பகையாளி நாட்டிற்கு அனுப்பிவிட்டு நாங்கள் ஐந்து பேரும் பிரிந்து இருப்பதில்லை. நீ இல்லாவிட்டால் நாளைப் பாரதங்களும் இல்லை. உன்னை அடையாளம் பிடித்து மோசம் பண்ணி விடுவார்கள். அனுப்ப மனது வரவில்லை என்றார்.

அதற்கு துரோபதை,

"மனதிலே விகடமொன்றும் மன்னனே எண்ண வேண்டாம்
எனக்குத்தான் பிள்ளையாய யேந்திய மாயனாரை
மனதுடன் குறத்தியாக வாகுடன் வேடங் கொண்டு
சினமுள்ள திரியன் சேதிசென்று நானறிந்து வாரேன்"

வசனம் :-

அப்படியானால் கிருஷ்ணதேவனைக் குழந்தையாக மடியிலே கட்டிக் கொண்டு நீயுங் குறத்தியாக வேஷங் கொண்டு யாருக்கும் அடையாளம் தெரியாமல் போய் வாரும் என்றார். நல்லது சுவாமி! அப்படியே போய் வருகிறேன் என்று சந்தோஷத்துடனே ஊருக்குப்

புறத்திலே வந்து வள்ளியம்மையை நினைத்து குறத்தியாக வேஷங் கொண்டு கிருஷ்ண தேவரை நமஸ்கரித்துக் குழந்தையாய் வாரும் என்று மடியிலே கட்டிக் கொண்டு, பஞ்ச பாண்டவர்கள் ஐந்து பேரையும் அனுப்புவித்துக் கொண்டு அஸ்தினாபுரத்துக்கு குறம் பாட வருகிறாள்.

துரோபதை,

"இந்தவோர் சபையிலேதான் ஏந்திழைக் குறத்தைப் பாடச்
செந்தமிழ் புலவோர் மற்றுஞ் சீருடனெனுப்புக் கொண்டு
எந்தப்பிழையானாலும் இருதயம் மகிழ்ந்து கேட்டு
விந்தையாய் யெல்லோருந்தான் விரகுடன் காத்திடீரோ"

வசனம்:

அடியேன் நாடி பாடுகின்றகுறவஞ்சி நாடகத்திலே எத்துணை பிழையிருந்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று துரோபதையான குறத்தி அஸ்தினாபுரத்திற்கு வருகிறாள்.

தியாகதரு

"நானனன்னான் நன்னனான நன்ன நன்னான"

"குறத்தி வார விந்தையைப் பாருங்கள்
குழந்தையைக்கை தனிலேந்திக் கொண்டு
சிறக்கவே நல்ல செல்வன்தனைக் கொண்டு

சிங்காரமான பெண் தேவியென்று

திரையில் வாழ்ந்திடுந் தெள்ளமுதே யென்று

செப்பிய டிக்கடி முத்தமிட்டு

கருவில்லாது பெய்யுங் கண்மணியேசாமி

மரபெல்லாம் ரட்சிக்கும ருந்தெய்வமே

இருந்திருந்து நடைநடந்தாள் அவள்

வெய்யலுரைக்க முகம் வேக

வச்ச காலடி நொய்யாமலே

சித்திர மாமயிலன்னம் போல்தானடந்தாள்

அஸ்தினாபுரத் ததிசயம் பார்க்கவே

சங்கீத குறத்தியும் வாராளே.

பெருந்துருவேன்னும் நடைநடந்து

பூமியிலன்னம் போல்தானடந்தாள்.

அஸ்தினாபுரத் ததிசயம் பார்க்கவே

அனலிலெழுந்த குறத்தி வந்தாள்"

வசனம் :-

ஏழ்நாடு, மேல் நாடு, வளநாடு, தென்னாடு, மச்ச தேசம், மறாட தேசம், கொச்சி, தேசிங் குடகு தேசம் இவையெல்லாம் குறம் பாடிக் கொண்டு அஸ்தினாபுரத்திலே துரியோதனனின் மனையாளான

பெருந்திருவளர் மனைக்கு வந்து குழந்தைக்குப் பால் வேண்டும் என்று கேட்கிறாள்.

நாட்டிய தரு

-நன்னனானா நன்னனானா-

"பாலனுக்கு பாலு வாரம்மே

சின்னக்குழந்தைக்குப் பாலுவாரம்மே

பாலனுக்குப் பாலுவார்த்தாக்கால், நல்ல

பாக்கியத்தை நீ பெறுவாயம்மே

அன்னப்பாலின்னங் குடியாது

ஆவின் பால் புகட்டினால் அதுவுமென்ன செய்யுமோ

பிள்ளை யொருபாலுங் குடியாதம்மே

பேரான முலைப்பாலே தந்தீரேயானால்

பிள்ளைகளைப் பெற்றமாதர்காள்

பேரான முலைப்பாலே தந்தீரேயானால்

வள்ளிக்கிழங்குங் கொழுந்தேனுந் தாரேன்

மலையிலுள்ள சஞ்வீவி மருந்து வகைத்தாரேன்

காட்டிலுள்ள வேறு வகைத்தாரேன்

கங்கையாய் சுரக்க மஞ்சளுரித்துத் தாரேன்

பாலனுக்கு பாலு வாரும் அம்மே

சின்னக் குழந்தைக்குப் பாலுவாரும் அம்மே"

வசனம் :-

இந்த வகை குறத்தி குழந்தைக்குப் பால் வார் என்று பெருந்திருவாளைக் கேட்க பெருந்திருவாளைக் குறத்தியைப் பார்த்து மகிழ்ந்து அன்னப்பால் ஆவின் பால் ஆகாதென்று பேரான முலைப்பாலையே கொடுத்தாள். அந்தப் பாலை குறத்தி வாங்கிக் கொண்டு அவளைப் பின்பு மகிழ்விக்க வேண்டுமென்று ஏது என்று சொல்லுகிறாள்.

-நன்னனானனா னன்னனா நன்னனானனா-

"வாசலென்னால் வாசலிது அ...அம்மே மகராசி வாசலிது
தேசம் புகழ் துரியோதரன் தானம்மே சிறப்புள்ள வாசலிது
ராசமன்ன மன்னனம்மே ராச துரியோதரன்தான்
கர்மமெல்லாம் மிகதுலைத்து அம்மேகைலாச பதம்பெறுவார்
சல்லி நல்லநிழலாடஅம்மே சகசம்புகுடைகவிப்பச்
சாந்தாலேதரை மெழுகியம்மே சந்தணத்தூற் கோலமிட்டு,
வச்சிரத்தால் கால்நிறுத்தியம்மே மரகதத்தூற் பந்தரிட்டு,
அரவக்கொடி துவசம்நிறுத்தியம்மேயவனியெல்லாந்தானளவாய்
மன்னன் துரியோதன்தான்ம்மே மகிழ்ந்திருக்கும் வாசலிது"

வசனம் :-

இப்படி அலங்காரமான சபையிலே இருக்கிறவளேயென்று

பின்னையுகம் துரோபதையான குறத்தி, உனக்கு நல்ல குறி சொல்லுகிறேன் கேளடியம்மே என்றாள். அதுகேட்ட பெருந்திருவாளை ஒருபுசம் இரு புசமாய் இரு புசம் இருபத்து நாலு புசமாகி அந்தக் குறத்தியைப் பார்த்து சொல்லுகிறாள்.

"நவமிகு குறத்தியரே நானிலந்தன்னிலே

----வரை முன்னைப்போல இந்த நாள் கண்டதில்லை

சிவந்த மான்றுளரைப் போலச் சூரியனொளிவதாக

அவனியோ தெய்வநாடோ அடியேனுக்குரைத்திடாயோ"

வசனம் :-

எந்நாட்டு வளப்பத்தைக் கேட்கிறாயா? ஆனால் சொல்லுகிறேன் கேள் அடியம்மே !

-குறத்தரு-

-தினதெந்தின தினதேந்தின தினதென்தின தினனா-

"எந்நாடு மலைநாடு மிருக்குமந்த நாடு

இயலான வெள்ளியங்கிரி தேசமடி நாங்கள்

கல்லடர்ந்த மலைநாடு காடுமெந்த காடு அம்மே

கயிலையங்கிரி நாதரங்கே கண்கொடுக்கு நாடு

சொல்லடர்ந்த மலைநாடு சுகம்பெருகு நாடு, அம்மே

சோணாசலீசருடையத் தேசமடி நாங்கள்

எத்திசையும் புகழ்படைத்த எருதேனுமாண்டியம்மே

ஏழையண்ணாமலை நாட்டுக் குறத்தியடிநாங்கள்

கூத்தன் மெத்த குனிந்தடுங் குஞ்சரவனாண்டியம்மே

கூசாமல் வாழுமந்தத்தேசமடி நாங்கள்

வருத்தமுற்று சென்னாலங்கே அம்மே

வாழருணை கிரிநாதர் தேசமடி நாங்கள்

முத்துமாலை ரத்தினமாலை யெங்களுடைய நாடுஅம்மே

மூவர்தமிழ் பாடுமலை யெங்களுடையசநாடு"

9வது பக்கம் எழுதப்படாமல் விடப்பட்டுள்ளது.

"நீலமலை நிமலமலையெங்களிடை நாடு, அம்மே

நித்தநித்தங் குறும்பாடுந்தேசமடி நாங்கள்

பச்சமலை பவழமலை யெங்களுடையநாடு, அம்மே

பயிர்கால மானசிவன் காளியுடன் வாது

கொச்சிமலை குடகுமலை யெங்களுடைய நாடு, அம்மே

குறம்பாடித் திரியுமந்த தேசமடி நாங்கள்

சிறுக்கி நல்ல குறச்சிறுக்கித் தினதினம்புக் காரியம்மே

தினவசந்த ராயருடைய குறத்தியடி நாங்கள்

வெள்ளெருக்குப் பூச்சூடிமிகுந்த வ்ண்ணாமலையிலம்மே

வேண வரமேகொடுக்குந் தேசமடிநாங்கள்

உருக்கிய பொன்கொடுத்தாலு யொன்றுமில்லையென்பாக் அம்மே

உண்ணாமுலை யம்மனுக்கு உகந்தமுது படைப்போம்.

வெள்ளிமலை ரத்தினமலை யெங்களுடையநாடு அம்மே

யிருதலைப்பட்சி யங்கே யிருக்குமெங்கள் நாடு

கண்டத்திற் கருப்புடைய கயிலையங்கிரி நாதன்அம்மே

காமனையும் எரித்தவனடி யென்னுடைய புருடன்"

வசனம் :-

இந்தப் பிரகாரம் குறத்தி தன்னுடைய நாட்டு வளத்தை சொல்லுகிறபோது பெருந்திருவாளை கேட்டுச் சந்தோஷப்பட்டுப் புண்ணிய பாபமும் நிதியுஞ் சொல்லுமென்றாள். அப்படியே. நல்லதென்று துரோபதையான குறத்தி சொல்லுகிறாள்.

-தரு-

"தேனூறல் பாயுமம்மா தினமுஞ்செந்நெல் விளையுங்

கல்லுமேல் செந்நெல்லடிகதிர் வாங்கிவிளையுங்

கட்டுக்கலமாகுங் கதிருழக்கு நெல்காணும்

வாழைவடக்கீனுமம்மே துய்யபலா மேற்கீனும்

கோவும் புலியுமம்மே ஒருகுளத்தில் நீர்குடிக்கும்

கீரியுஞ் சர்ப்பமும்மே ஒருகிண்ணியில் பால் குடிக்கும்

எலியும் பூனையும் ஒரு கலத்தில் பால்குடிக்கும்

தங்காமழை சொரிந்து தழைக்குமெங்கள் நாடு

திங்கள் மும்மாரிபெய்ந்து செழித்திருக்கும் அம்மே"

வசனம் :-

இந்த அதிசயமெல்லாம் எந்நாட்டில் உண்டு அடியம்மே! என்றாள்.

"குறத்தியே உன்னைப் போலகோதையே ஒருவரில்லை

நிறங்களும் வார்த்தைதானும் நேரிழைவடிவுதானுந்

திறமையுங் கண்டதில்லை செங்கதிரொளி போல்வந்தாய்

குறக்குலந்தானோ வேகுலங்களைச் சொல்லுமென்றாள்"

வசனம் :-

இப்படி பெருந்திருவாளையாகப்பட்டவளுக்குக் குலாச்சாரத்தை சொல்லச் சொல்லுகிறாள். ஆனால் நமக்கு தர்மபுத்திரர் சொல்லி அனுப்பினாற்போல் ஆச்சுது. இதற்கு என்ன செய்யப் போகிறோம். பொய் சொன்னால் பதிவிரதா தன்மை குலைந்து போகிறது. ஆனால் இவளையுமறியாமல் குலாச்சாரத்தைச் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறாள்.

-குறம்-

-தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தின்னா-

"எங்கள் குலம் ராசகுலங்குறக் கூட்டமல்லா அம்மே

கொழுந்தனார் குடிசையிலே குடியிருப்போம் நாங்கள்

ஐவருக்கும் பெண்டிருப்போம் நாங்களடியம்மே

அபிமானங்குலையாத சாதியடி நாங்கள்

பஞ்சவர்க்கு பெண்டிருப்போம் நாங்களடியம்மே

பரிதாபங்குலையாத சாதியடி நாங்கள்

பெண்டிருந்த தோஷமொழியப் பிள்ளையொன்று மறியோம்மே

பெருநெருப்பைத் தீண்டோணாத சாதியடி நாங்கள்

மாலையிட்டநாள் முதலாய் மணம் நீந்தாரில்லையம்மே

மடிநெருப்பைத் தீண்டொணாத சாதியடிநாங்கள்

கூறையிட்டநாள் முதலாய்க் குணமறிந்தாரில்லையம்மே

குடிநெருப்பைத் தீண்டொணாத சாதியடிநாங்கள்"

வசனம் :-

அடியம்மே குறத்தி! புருடனண்டையிலே சேராத பெண்சாதி என்றாயே ? ஆனால், உன்மடியில் இருக்கின்றகுழந்தையேதடி ? குறத்தி! ஆனால் குழந்தை வந்த விபரம் சொல்லுகிறேன் கேளடியம்மை!

-தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா-

"ஆயனருளாளன் னெங்கள் ளண்ணனடியம்மே

அரிவையான சீதையெங்கள் நாத்தினாரடியம்மே

மாயவனை மஞ்சள்மைந்தன் வரம் வேண்டுமென்று நாங்களம்மே

மனதிலெண்ணி நினைத்தகால் மைந்தன்வரமீவான்

மாயவனை மனதினுள்ளே நினைப்போமடி நாங்கள்

மாயவனுங் குழந்தையாக மடியில் வருவானடி

பிள்ளையில்லா வெங்களுக்குப் பிள்ளை வரமீவோன் அம்மே

பிள்ளைக்கலி தீர்க்கவந்த பெருமாளிவன்றாஅடி

மஞ்சனில்லா வெங்களுக்கு மஞ்சன் வரமீவான் அம்மே

மஞ்சன் கலிதீர்க்கவந்த மாயனிவன்தான் அடி

மந்திரத்தாலஞ்சு மண்டபம் உண்டடிதானம்மே

மகதேவர் தந்தபிண்டனிதுதான் அடியம்மே"

வசனம் :-

உங்களுக்கெல்லாம் புருடர்களாலே பிள்ளையுண்டானால், எங்கள் தெய்வ நாட்டிலே மந்திரத்தாலும் வரத்தினாலும் பிள்ளையுண்டு அடியம்மே!

நல்லது அப்படியே ஆகட்டும். நீ எந்த நாடு பார்த்து வந்தாய் சொல்லடி குறத்தி!

சொல்லுகிறேன் கேள் அடியம்மே!

-குறம்-

-தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா-

"பூலோகம் புவர்லோகம் பார்த்துவந்தேன் அம்மே

புதுமையுள்ள சிவலோகம் பார்த்து வந்தேன் அம்மே

மேலான பாதாளம் பார்த்து வந்தேன் அம்மே

மேன்மையுள்ள வைகுண்டம் பார்த்து வந்தேன் அம்மே

சீரான சத்தியலோகம் பார்த்து வந்தேன் அம்மே

செகம்புகழும் அண்டங்களும் பார்த்துவந்தேனம்மே

மகாலோகம் கனலோகம் பார்த்து வந்தேனம்மே

வரிசையுள்ள பிரம்மலோகம் பார்த்து வந்தேனம்மே

நேரான நாகலோகம் பார்த்து வந்தேனம்மே

நிச்சயமாய்க் குறிசொல்லுங் குறத்தியடியம்மே"

வசனம் :-

இந்தத் தெய்வலோகமெல்லாம் பார்த்து வந்தேன் என்று சொன்னால், கேள் ஆனால், நீ தேவர் நாட்டிலே சொன்ன குறியும் வாங்கி வந்த பூஷணங்களுஞ் சொல்லடி குறத்தி!

சொல்லுகிறேன் கேளடியம்மே!

-குறம்-

"ஈசுவரனாக் குமாரருக்கும் விக்கினர்க்குஞ் சொன்னேனம்மே

வயிறுமிழந்த முகம்வேறு ஆறுமுகனென்று சொன்னேன்

இந்திரருக்கும் வானவருக்கு மினியகுறி சொன்னேனம்மே

இந்திரகும் வானவரும் மெச்சிக்கொண்டு அம்மே

ஈசுவரர்க்குப்பிறர் மத்தி தொடுக்குதென்று சொன்னேன்

ஈசுவரரும் மெச்சிக் கொண்டு எந்தனுக்குஅம்மே

விக்கினரரும் மெச்சிக் கொண்டு எந்தனுக்குஅம்மே

....குறக் கூடையென் கையில் தந்தாடியம்மே

இந்திரரும் வானவரும் மெச்கிசிக் கொண்டுஅம்மே

கல்லிழைத்த கணையாழி தந்தாரடி அடியம்மே

ஈசுவரனும் ஈசுவரியும் எந்தனுக்கு அம்மே

கல்லிழைத்த மார்பதக்கந் தந்தாரடியம்மே"

வசனம் :-

இப்படி குறம்பாடி அனேக பூஷணங்களும் வாங்கிவந்தேன் என்றாயே! என் மனதில் பன்னிரண்டு வருடமாய் ஒரு கிலேசம் இருக்கிறது. அந்தக் கிலேசத்தை சோன்னாயேனால் உன் குறக்கூடை நிறைய முத்து, பச்சை, பவழம், மாணிக்கம், வயிரம், வயிடூர்யம், புஷ்பராகம், கோமேதகம், நீலம், மரகதம் இப்படிக்கு ஒத்த நவ இரத்தினங்களையெல்லாம் கொடுக்கிறேன் அடியம்மே! குறத்தி!

குறத்தி, அந்த நவரத்தினங்களெல்லாம் எனக்கு வேண்டாம். உன் கையிலேயிருக்கிற செந்நெல்லைக் கொடுத்தாயானால் சொல்லுகிறேன் கேள் அடியம்மே!

செந்நெல்லை வாங்கிக் கொண்டு சொல்லடி குறத்தி! ஆனால் சொல்லுகிறேன் கேளடியம்மே!

அகவல்

"அள்ளியே சாணியிட்டு அகலமாய் மெழுகு

பிள்ளை யாரதனைவை பூவையிஞ் சாத்து

கிழங்குடன் வாழைப் பழங்களும் படைத்து

முழங்கவே தேங்காய் முன்னின்று உடைத்து

தூவமெடுத்து தோத்திரம் பண்ணு

தீபமெடுத்துச் சிந்தையில் நீநினை

பூவாடைக் காரிக்குப் பாவாடை

ஒன்று வைத்துமன்புடன் சுற்றிக்கும்பிடு

இந்தப்பிள்ளைக்கு உச்சிக்கண் குளிரக்களித்து

ஒருகரண்டி விளக்கெண்ணை குத்து

உன்குலதெய்வங்களை உகந்து நீபோற்று

என்குல தெய்வங்களை உகந்து நான்புகழ்வேனே"

"கங்கா பவானி காளிகாளம்மா

அங்காளம்மா அயனாரப்பா

வங்கணமான தேவதைகளே

கைலாசவாசா கச்சாலைநாதா

ஏகாம்பரவீச கொல்லாபுரவம்மா

குறக்கூடனாய்ச்சி சொல்லாக்குறி சொல்லத்

துணையாகவே வா!"

தரு

-தினதெந்தினா-

"முந்திமுந்தி வினாயகனைத் தொழுவோமடி நாங்கள்அம்மே!

முருகருடைப் பாதமலர் எந்நாளும் மறவோம்

சத்திவினாயகனைத் தொழுவோமடி நாங்களம்மே!

சரஸ்வதியை யனுதினமுஞ் சிந்தையிலே மறவோம்

ஆதிசிவமாயவனைப் பிரம்மாவைத் தொழுவோமம்மே!

ஆகாசதேவருடை யிந்திரரையுமிரவோம்"

வசனம் :-

இப்படியெல்லாம் தேவாதிகளை நினைத்துத் தன்னுடைய கொல்லாபுரத்தம்மாளையும் நினைத்து சொல்லுகிறேன் கேள் அடியம்மே! என்றாள்.

அது கேட்டுப் பெருந்திருவாளை, தன்னுடைய பேருந்தனுடைய பிறந்தநாள்பேரும் கணவன்பேருஞ் சொல்லிப் பிறகு விசாரத்தைச் சொல்லடி குறத்தி! என்றாள். அப்படியே நாம் பேரு சொல்லுகிறதுறுவே. ஆனாலும் என்னவாச்சுது. எங்களுக்கெல்லாம் கொல்லாபுரத்து அம்மாளை நினைத்து சொல்லுகிறேன் கேளடியம்மே.

-தினதெந்தினா-

“முறத்துநிரம்ப பச்சைசெந்நெல் கொண்டு மூன்றாய்பகுந்துஅம்மே

உன்மனதெண்ணிக் கேட்டதேல்லாஞ் சொல்லுகிறேன்கேளும்

உன்பெருந்திருவாள் உடன்பிறந்தாள் சுபத்திரையம்மே!

உன்கணவன் துரியோதரன் உண்டடிதானம்மே

லக்கனுக்கு மாரனுக்குப் பூணூல் கலியாணமென்று

ஐவரையும் அழைத்துவந்ததுண்டடி தானீங்கள்

வந்ததோர் வழிதனிலே வசிகளைத் தானிறுத்தியம்மே

வதைவதைக்கப் பண்ணினது உண்டடிதான் நீங்கள்

ஐவருமேவந்த பின்பு சிங்காதனங்களைப் போட்டுஅம்மே

அதன்கீழே பொய்க்குழிகள் போட்டுவைத்தார் அம்மே

அதற்குதப்பிப்பிழைத்தார்கள் பாண்டவர்களம்மே

ஆயனார் மாயனுடைய உபாயமடியம்மே

முடிமன்னரவருக்கு மல்லர்களைவிட்டு முறுக்கி

எண்ணெய் தேய்த்துக் கொல்ல மனந்துனிந்தாரம்மே

குளிக்குமந்தத் துறைதனிலே கூர்வசியை நாட்டிக்

கூசாமல் பாண்டவரைக் கொல்ல மனந்துணிந்தார்

உண்ணவல்ல சோற்றிலேதான் நஞ்சமிருதங்கலந்தம்மே

உயிர்களும் பதைபதைக்கக் கொல்ல மனந்துணிந்தார்.

படுக்குமந்தப் பாய்தனிலே பாம்புகளைக் கட்டிஅம்மே

பதைபதைக்கப் பாண்டவரைக் கொல்லமனந் துணிந்தார்

அதற்குந்தப்பிப் பிழைத்தார்கள் பாண்டவர்களம்மே

ஆயனார் மாயனுடைய உபாயமடியம்மே

வஞ்சனையால் சூதாடிப் பாண்டவரை-------யன்று

மாளிகையில் விலங்குகளைப் பூட்டிவைத்தாரம்மே

இத்தனை வஞ்சனைகள் செய்தது உண்டடிதான்நீங்கள்

இன்னம் கொஞ்சமுண்டடிதான் சொல்லுகிறேன் கேளும்

அவருடைய நாடுகளையடங்களுமே வாங்கி

அரண்மனையுந் தானிடித்து அநியாயவகை செய்தார்

ஐவருடைத் தேவியரை யம்பலத்தில் ஏற்றி

அவளைமிக வாயிடும்புபேசினார் அடியம்மே!

உத்தமியைக்கொண்டு வந்து ஊர்சபையில் நிறுத்தி

உரியதுயிலுரித்தது உண்டடிதான் நீங்கள்

பத்தினியைக் கொண்டுவந்து பார்சபையில் நிறுத்திப்

பங்கமழியப் பேசியது உண்டடிதான் அம்மே

மாதுதனைக் கொண்டுவந்து மகாசபையில் நிறுத்தி

மனமுறியத்துயிலுரித்தது உண்டடிதான் நீங்கள்

பந்தயத்தினாலே யடிப்பகட்டைதனையாடி

பாண்டவரைக் காட்டிலே வனவாசம் பொகவோட்டி

இத்தனை வஞ்சங்கள் செய்ததுண்டடிதானீங்கள்

இன்னங்கோடியுண்டடிதான் சொல்லப் போனால்நிரம்ப"

வசனம் :-

நீங்கள் அந்தத் தாயாதிகள் இத்துணை வஞ்சனைகளெல்லாம் செய்தது உண்டு (அடியம்மே)

நாங்கள் செய்தது(மெய்தாண்டி) மெய்தான் அடிக் குறத்தி! ஆனால் காடுபோன பாண்டவர்கள் நாடு தேடி வருவார்களோ? இல்லை என்றும் என் புருஷனே அவர் நாடும் ஆண்டு கொண்டிருப்பாரோ? சொல்லடி குறத்தி! என்றாள்.

அடியெம்மே! அவர்நாடு தேடி வரதும் நானறிவேனா. ஆனாலும், என்னவாச்சுது. எங்கள் கொல்லாபுரத்து அம்மனை நினைந்து சொல்லுகிறேன் கேள் அடியம்மே!

-தரு-

தினதெந்தினா தினதெந்தினா-

"தர்மமே செயமென்று போனார்அவர் வனவாசம்மே

தர்மமே செயமென்று வருவாரடியம்மே

அஞ்சுபேரும் அஞ்சுவேடங் கோண்டடிதானம்மே

அன்பான விராடபுரஞ் சேர்ந்திருப்பாரடியம்மே

இன்னுமிந்த மண்ணதனில் சேனை படைக்கூட்டி

யுத்தங்கள் செய்யக் காரண மிருக்குதடியம்மே"

வசனம் :-

ஆனால் காடு போன பாண்டவர்கள் நாடு தேடு வந்து தங்கள் தாயாதுகளோடே சண்டையிட்டு நாடு வாங்கவேண்டுமென்று ஆனை, குதிரை சேனை பரிவாரத்துடன் சண்டையிட்டு வருகிறார்கள். அவர்களோடு கூடிப்போனவள் சொன்ன சபதம் முடிக்க வேண்டும் என்று வருகிறாள். அந்த சபதங்களையும் சொல்லுகிறேன் கேள் அடியம்மே!

சொல்லடி குறத்தி!

தரு

-தினதெந்தினா தினதெந்தினா-

"பார்சபையில் விரித்த தலைக் கூந்தலடியம்மே

நாளைப் படுகளத்தில் முடிப்பன்என்று போனாள் வனவாசம்

ஊர்சபையில் விரித்த தலைக்கூந்தல் அடியம்மே

நாளை யுத்தத்தில் முடிப்பனேன்று போனாள் வனவாசம்

நாடுனாருத்தியல்லோ தலைவிரித்தேன் என்றல்லேயம்மே

இந்த உலகமெல்லாம் தலைவிரிக்க ஆகிறதென்று போனாள்

வஞ்சனைகள் செய்ததொரு மன்னவரையெல்லாம்

நாளைமாது ரணகளத்தில் முடிப்பேனென்று போனாள்

வஞ்சனையால் விரித்ததலைக் கூந்தலடியம்மே

நாளை மன்னவர்கள் மார்மேலே முடிப்பனென்று போனாள்

இன்னமெத்த சபதமிட்டு வேந்திழையும் போனாள்

என்னாலே பேதமெல்லாஞ் சொல்லமுடியாது"

வசனம் :-

இப்படியாக அந்த நாளிலே அவள் சாபமிட்டுப் போனதெல்லாம் என்னாலே சொல்ல முடியாது. அந்தச் சபதமெல்லாம் முடியவேண்டுமென்று போனாள் அம்மே! என்றாள்.

அந்த வார்த்தையைப் பெருந்திருவாளை கேட்டு திகில் எடுத்து என்ன செய்வேனென்று மனந்தளர்ந்து வெகுவிசாரத்தோடு இருந்தாள். அந்த விசாரத்தைக் குறத்தி கண்டு இவள் மனதைத் தேற்றுவித்து செந்நெல்லைக் கொண்டு போக வேண்டும் இல்லாவிட்டால் செந்நெல்லைப் பிடுங்கிக் கொள்ளுவாளென்று மனதிலேயெண்ணிக் கொண்டு அந்தப் பெருந்திருவாளையை சந்தோஷப்படுத்திவிட வேண்டும் என்று குறி ஒன்று சொல்லுகிறாள்.

-முடுகுதரு -

-தினதெந்தினா தினதெந்தினா-

"அம்மாடியம்மாடி யம்மாடியம்மா

ஆயுசுவளந்தேறு ஆண்பிள்ளைளைப் பெறுவாய்

தைமாசம் வீட்டுக்கொரு சம்பந்திவருவான்

தப்பாதுவடகிழக்கு மூலையிலேயிருந்தே

இம்மாதங்குளியுடனே யுனக்குப்பிள்ளையுண்டு

உன்னாணை யென்னாணை மலையானையம்மே

உனக்குஒரு நாளஞ்சிந்தனைகளில்லை

இம்மாதங்குளியுடனே யுனக்குப்பிள்ளையுண்டு

சும்மாயிரம்மா நீசும்மாயிரம்மா

இந்நாட்டுக்குறத்தியைப் போலிசை சொல்லமாட்டோம்

தெய்வநாட்டுக் குறத்தியடியெனக் கிளையதாயே

இந்திரருக்கும் வானவர்க்குமினிய கணிசொல்வோம்

எல்லாரும் வந்துகணி கேட்பாரடியம்மே

அஞ்சுரெண்டு பிராயத்திலே கொஞ்சிவிளையாடி

ஆறிரண்டுபிராயத்திலே குறக்கூடையேந்தி

ஈரேழுபதினாலு லோகங்களுமெச்ச

எங்கெங்குறம்பாடி வருவமடியம்மே

அந்தமுள்ள குறக்கூடையென் கையிலேயம்மே

ஆதிபலராமபத்திரண்டு குழந்தையடியம்மே

சிந்தையிலே துயரங்கள் வாராமல்அம்மே

ஸ்ரீவேங்கடேசர் துணைகாப்பாரடியம்மே

கூடைமுறம் றாங்கள் கட்டிக்குழந்தைகள்

கும்பிட்டுக் கேளம்மா சம்பத்துண்டாவாய்

உண்டானபடி சொல்வேன் அண்டையிலேவாடி

உன்டனைக்ஈகு ஒருநாளுஞ்சிந்தனைகளில்லை

உட்கார்ந்து கேளடி தப்பாமற் சொல்வேன்

செங்கைவளைகை நீட்டிக் குறத்திகேட்டால் அம்மே

துயரங்கள் சிந்தையிலே வாராதடியம்மே

வாசப்படிவலமாகச் சொல்லுகிறது அடிகௌளி

வருவானடியுன் கணவன் மகிழ்ந்தணையவிப்போ

வாடியம்மே யுந்தனிட வலதுகை பார்ப்போம்

மனதில்லுல்லபடியெல்லாஞ் சொல்லுகிறேனம்மே

ஏன்டியம்மே மனஞ்சலித்து இருக்கின்றாயடியம்மே

உண்டானபடி சொல்வேன் அண்டையிலேவாடி

அவனியெல்லாம் ஆளும் ஆண்பிள்ளையைப் பெறுவாய்

அம்மா நீ அஞ்சாதே அண்டையிலேவாடி !"

வசனம் :-

அண்டையிலே வந்து கை நீட்டிக் காட்டிக்கேட்டாயானால் மனதிலுள்ளபடிச் சொல்லுகிறேன் என்றாள். அதுகேட்டுப் பெருந்திருவாளையறிந்து இந்தக் குறத்தி நம்முடைய விசாரத்தைப்

பார்த்து இப்படியெல்லாம் சொல்லுகிறாள் என்று தொண்ணூற்றொன்பது ராச கன்னிகைகளையும்ளையும் அழைத்து இந்த குறத்தியைப் பத்திரமாக பார்த்திருங்கள் என்று சொல்லிவிட்டு தன்னுடைய மாமியாரான காந்தாரி வீட்டுக்குப்போய்ச் சொல்லுகிறாள்.

-ஏலதரு-

"என்னசெய்வேன் ஏதுசெய்வேன்

எவளோ ஒருத்தி வந்தாள்

எந்தநாடோவேதுநாடோ இங்கே வந்தாள் மாமியத்தை

எந்தநாடுவென்று கேட்டேன் தெய்வநாடுவென்று சொன்னாள்

பாலனுக்குப் பாலுகேட்க பாங்குடனே வந்தேனென்றாள்

பாலனுக்குப் பாலுவார்த்தேன் பாங்குடனே குலங்கேட்டேன்

குலமென்றால் ராசகுலங்குறக்கூட்டமல்லவென்றாள்

ஐவருக்கு வெண்டிருப்போம் அழியாத சாதியென்றாள்

மாயனுடைய கிருபையாலே மாயனுடைய கிருபையாலே

மைந்தர் தங்களுக்குண்டு என்றாள்

உந்தன்குறைஎண்ணமெல்லாம் உள்ளபடிசொல்வேனென்றாள்

சொல்லுமென்று கேட்டிருந்தேன் சொன்னவையெல்லாங் கேளுமத்தே

அன்று பஞ்சபாண்டவளரணங்கைச் செய்ததையெல்லாம்

தானும் முன்மே கண்டாற்போல தானுரைத்தாள் எந்தனுக்கு

ஒன்றுந்தவிராது சொன்னாள் யுத்தங்களாகிறதென்றாள்

ஆனைபடைசேனை கூட்டியவர் இவளரக்கொல்லவருவார் என்றாள்

என்ன செய்வோம் என்ன செய்வோம் ஏது செய்வோம் மாமியத்தை!"

வசனம் :-

இப்படியெல்லாஞ்சொல்லிப் பெருந்திருவாள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும்போது காந்தாரியும் மருமகள் கண்ணைத் துடைத்து அம்மா! நீ ஏன் விசாரப்படுகிறாய். நமக்கு அவர்கள் எதிராயிருந்து சண்டை பண்ணப் போகிறார்களா? நமக்கு ஒருநாளும் பழுது வரப்போகிறதில்லை. அவளும் அவர்களுடனே கூடத்திரிந்து வந்தவளாகவேண்டும். ஆனபடியினாலே சொன்னாள். அந்தக் குறத்தியையும் ஒரு வீட்டில் வைத்துக் காவல் வைத்துக் கொண்டிருந்தால் அவள் பூர்வகோத்திரமெல்லாம் அறியலாம். நீ சாப்பிடுவாய் என்று இரண்டு நாழிகை வைத்திருந்தாள். அப்போது ஸ்ரீகிருஷ்ணதேவர் ஞானதிருஷ்டியினாலே நடந்த விருந்தாந்தம் அறிந்து சொல்லுகிறார்.

துரோபதை!

"குறத்தியின் மடியிலேதான் குழந்தையுங் காகாவென்று

கருத்ததோர் கருயமாலுங் காவலன் விசயனார்க்கு

உரைத்திடும் விசனமெல்லாம் உரைத்தபின் குறத்திகாதில்

திருத்தமாய் உரைத்து நின்றாள் சேயிழை பலவுந்தானே

உரைத்திடும்போது வேந்தன் ஒளிகுறவேஷங்கொண்டு

வருத்தமாயுகமெல்லாம் வஞ்சியைத் தேடிக்கொண்டு

செருக்ளத்திரியன்தேவி சேயிழை வீடுதேடி

வருகிறவேகந்தனை மட்டிட முடிந்திடாதே"

-சிங்கன் தரு-

"சிங்கன் வாரானே மலைக்குறவிங்கன் வாரானே

கல்லடி சிக்கந்தோளிற் போட்டுக் கையிற்சில்லாக் கோலுங்கொண்டு

சிங்கன் வாரானே மலைக்குறவிங்கன் வாரானே

வந்தக்கன்னியை வரம்பில் குத்தடா வக்காகொக்குபடச்வாரானே

மலைக்குறசிங்கன் வாரானே

சேந்தகன்னியை சேரவளையடா செங்கால் நாரைபடச்

செம்பிட்டங்காக்காய் துக்கணாங்குருவி

சேந்துவளையில் விழுந்திடத் தூக்கிப்பிடியடா

சிக்கச்சுதையே பறவைகள் சிக்கச்சுடையே

சிங்கிளைக்காணிகளோ மலைக்குறவஞ்சியைக்காணீகளோ ?

சிங்கியைத் தேடுகிறானா மலைக் குறவஞ்சியைத் தேடுகிறானே."

வசனம் :-

இந்தப்பிரகாரம் குறத்தியை குறவன் தேடிக்கொண்டு வந்து

பெருந்திருவாளர் மனையிலே குறத்தியைக் கண்டான். அப்போது குறத்தி குறவனைப் பார்த்து சொல்லுகிறாள்.

-தரு-

"எங்கிருந்து எங்கே வந்தாய் குறமகனே!

எந்தநாடு எந்ததேசம் குறமகனே

காஞ்சீபுரம் நாடுஅடி! தான் குறமகளே

நான் கொல்லாபுரந் தேடிவந்தேன் குறமகளே!

கொல்லாபுரம் வீடோ அடாதான் குறமகளே

ஊசிவள நாடு தேடி குறமகளே நான்

உன்னைத் தேடித் தேடி வந்தேன் குறமகளே

ஊசிவள நாடு விட்டுக் குறமகளே

இங்கே குறம்பாட வந்தேன் குறமகனே

இவ்வந்திவருணாபுரிக் குறமகளே நான்

விராடபுரந்தேடி வந்தேன் குறமகளே

விராடபுர வீடோ அடாதான் குறமகனே

இங்கு வந்த வகை சொல்லாய்க் குறமகனே!

குறம்பாடுந் தேசமேல்லாங் குறமகளே உன்னை

கூவிகூவித் தேடிவந்தேன் குறமகளே!

கன்னியாகுமரி தேசங்குறமகனே நான்

குறம்பாட வந்தேன் அடா குறமகனே!

உன்னை நானுங் காணாதே குறமகளே! நான்

உலகமெல்லாந் தேடிவந்தேன் குறமகளே!

ஏதுக்கென்னைத் தேடிவந்தாய் குறமகனே

இங்குகறஞ் சொல்ல வந்தேன் அடாகுறமகனே

ஏதுகளவயென்று கேட்டாய் குறமகளே

எங்கிருந்து எங்குவந்தாய் குறமகளே

அஸ்தினாபுரத்திலேதான் குறமகனே நான்

குறம்பாட வந்தேன் அடா குறமகனே"

-சிங்கியாட்டத்தரு-

சிங்கன் : "தேடித்திரிந்துதிகைத்தும் இருந்தேனே சிங்கி

சிங்கி : தேடிப்புதைத்த திரவியம் நானடா சிங்கா

சிங்கன் : பேததர்க்கம்பேசி பிதற்றாதே நீபோடி சிங்கி

சிங்கி : பித்தனுக்கோகுணம் நூலினஞ்சுவை காணுஞ்சிங்கா

சிங்கன் : முத்துக்குரும்பை மேல் மெத்தக் களையானேன் சிங்கி

சிங்கி : முடவன் கொம்புதேனுக்காசைப் பட்டாய் சிங்கா

சிங்கன் : கோமள நெற்றியில் கோட்டிப்பூவே சிங்கி

சிங்கி : கோட்டிப்பூ வோரத்தில் சுட்டிக்கண்டாய்டா சிங்கா

சிங்கன் : மூக்குச்சிப்பேறதூக்கிக் கொண்டேதடி சிங்கி

சிங்கி : முத்துமின்னார் தந்தமுத்து மூக்குத்திகாண் சிங்கா

சிங்கன் : கழுத்தில் பல்லிமுட்டை கட்டிதொங்கிறதேதடி சிங்கி

கந்தபோந்தலும் இடுப்பில் ஏதடி சிங்கி

சிங்கி : அந்தக்கந்தை மின்னார்தை கஸ்தூரி.......காண் சிங்கா"

வசனம் :-

இந்தப் பிரகாரம் குறவன் அதட்டிடக் குறத்தியை ஆர்பாட்டம் போட்டு அடிப்பேன் கொல்லுவேன் என்று துரத்திக் கொண்டு வருகின்றபோது குறத்தி செந்நெல்லை எடுத்துக் கொண்டு 'கடகட'வென்று அரற்றிக்கொண்டு ஓடினாள். அப்போது அங்கேயிருந்த தொண்ணூற்றியொன்பது ராசகன்னிகைகளும் அதட்டியதைக் கண்டு பயந்து இருந்தாள். அந்த வேளையில் பெருந்திருவாளை, காந்தாரியின் வீட்டுக்குள்ளேயிருந்து இரண்டு மூன்று நாழிகைகள் சென்றபிறகு வந்தாள். குறத்தியைக் காணாமல் ஓரகத்திமாரைக் கேட்டாள். குறவன் வந்து குறத்தியைத் துரத்திக் கொண்டு போனான் என்றார்கள். அவர்பின் குறத்தியை விட்டுவிட்டார்களே என்று வெகு விசாரம் உற்று மல்லர்கள் ஆயிரம் பேரை அழைத்து நாலுமூலைகளிலும் நாடவிட்டாள். அவர்கள் எல்லா மூலைகளையும் தேடிப் பார்த்துக் காணோம் என்று வந்துவிட்டார்கள். அப்பால் குறவனும் குறத்தியும் விராடபுரத்திலே வந்து தர்மபுத்திரரைக் கண்டு நடந்த விஷேசங்களேல்லாம் சொல்லிக் கொண்டு வந்து செந்நெல்லைக் கொடுத்தார்கள். தர்மராசர் பீமன்

கையிலே கொடுத்து விரைத்துப் பயிர்பண்ணச் சொன்னார். அப்படியே நல்லதென்று பீமன் வாங்கிக் கொண்டு அவர் அவர்கள் வேஷங்கொண்டு அவரவர்கள் இருந்த இடத்திலேயே இருந்தார்கள்.

துரோபதை!

"வீமனார் செந்நெல்தன்னை விரைத்திட பயிருமாச்சுது
பூமியில் கிளிகளெல்லாம் புசித்துதானிருந்தப்போ
வாமனன் கிருஷ்ணதேவன் மாயவன் அருளினாலே
நேமமாங்குறத்திமக்கள் நிதியுடன் வீறிநின்றார்
இந்தவோர் குறக்கதை கேட்டோர் எழுதினோர் படிப்பித்தோரும்
இந்திரன்போல வாழ்ந்து இமையவர் பரமுண்டாக்கி
மைந்தருஞ்சுற்றத்தாரும் வாழ்த்தப்பின் ஆயன்பாதம்
அந்தமாய் பெற்று வாழ்வார் அமரருமதிக்கத்தானே
அலகைமுலை சுவைத்த அச்சுதாபச்சை
இலகுமணி மார்பா எழிலாங்கா-உலகளந்த
பாதனே மாலே பரமனே பங்கயக்கண்
நாதனே முன்னே நட"

அநந்தபிள்ளைவாத்தியார் எழுதின துரோபதை குறம் முற்றும்.